**செய்தி வெளியீடு எண்:173** **நாள் : 26.03.2016**

**செய்தி வெளியீடு**

**தேர்தல் நன்னடத்தை விதி 25.03.2016 வரை உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற ரூ.14.28 கோடி ரொக்கம் பறிமுதல் – 1,73,718 சுவர் விளம்பரங்கள் அழிக்கப்பட்டன.**

**************

தமிழ்நாடு பொது தேர்தலையொட்டி, தேர்தல் நடத்தை விதிமுறைகளை அமல்படுத்தும் பறக்கும் படையினர் 24.3.16 அன்று சோதனையின்போது, புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.6.41 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் 25.3.16 அன்று சோதனையில் வேலூரில் ரூ.1.30 லட்சம் திருவண்ணாமலையில் 340 சிமெண்ட் மூட்டைகள், நீலகிரி மாவட்டத்தில் ரூ.5.20 லட்சம் நாகப்பட்டினம் மாவட்டத்தில் ரூ.4.50 லட்சம், விருதுநகர் மாவட்டத்தில் ரூ.1.19 லட்சம், மதுரை மாநகரில் மதுவகைகள் உட்பட மொத்தம் ரூ.12,19,000/– ரொக்கம் கைப்பற்றப்பட்டது.

நிலையான கண்காணிப்புக் குழுவினர் 24.3.316 அன்று சோதனை மேற்கொண்டபோது, கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூ.1.25 லட்சம், சென்னையில் ரூ.2.85 லட்சம், விருதுநகரில் ரூ.1.60 லட்சம், பெரம்பலூரில் ரூ.1.63 லட்சம், திருச்சி மாநகரில் 224 பிரஸ்டிஜ் குக்கர்கள், சிவகங்கையில் ரூ.2 லட்சம், கோவையில் ரூ.2.15 லட்சம் பிடிபட்டன. மொத்தம் ரூ.11.48 லட்சம் ரொக்கம் 24.3.16 அன்றும் 25.3.16 அன்றைய சோதனையின்போது நீலகிரி மாவட்டத்தில் ரூ.1.18 லட்சம், பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.1 லட்சம், விருதுநகர் மாவட்டத்தில் ரூ.1.35 லட்சம், சேலம் நகரில் ரூ.56,56,820/– திருப்பூர் நகரில் ரூ.1.25 லட்சம் என மொத்தம் ரூ.62.33 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டது.

26.3.16 வரை தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறியதாக 2,23,634 புகார்கள் பெறப்பட்டதில் 1,73,718 புகார்களில் சுவர் விளம்பரங்கள் அழிக்கப்பட்டது.

**வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**